©
GOVERNMENT OF TAMIL NADU
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 19] CHENNAI, WEDNESDAY, MAY 10, 2017
Chithirai 27, Hevilambi, Thiruvalluvar Aandu–2048

## Part II—Section 1

**Notifications or Orders of specific character or of particular interest to the public issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

### CONTENTS

பக்கங்கள்

வருவாய்த் துறை

[ஆட்சி எல்லை – ஈரோடு மாவட்டம் – பவானி வட்டம் – சந்திராபுரம் கிராமத்தை கோபிசெட்டிபாளையம் வட்டத்துடன் இணைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது] .. 36

## NOTIFICATIONS BY GOVERNMENT

**வருவாய்த் துறை**

*தலைமைச் செயலகம், 2017 மே 10.*

No. II(1)/REV/15/2017.

**[ஆட்சி எல்லை – ஈரோடு மாவட்டம் – பவானி வட்டம் – சந்திராபுரம் கிராமத்தை கோபிசெட்டிபாளையம் வட்டத்துடன் இணைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.]**

**கீழ்க்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது:–**

*[அரசாணை (நிலை) எண் 103, வருவாய் [வ.நி.1(1)], 18 ஏப்ரல் 2017.]*

படிக்கவும்:

1. அரசாணை (நிலை) எண்.409, வருவாய் [வ.நி.1(1)]த் துறை, நாள் 21–11–2012.
2. ஈரோடு மாவட்ட ஆட்சியர் கடிதம் ந.க.எண். 45070/ஈ1, நாள் 23–11–2015.
3. முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கடித ந.க.பணி.6(3)/52514/2015, நாள் 03–02–2016.

––––

**ஆணை:எண். 103, வருவாய் [வ.நி.1(1)]த் துறை, 18 ஏப்ரல் 2017.**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஈரோடு மாவட்டம், பவானி மற்றும் கோபிசெட்டிபாளையம் வட்டங்களைச் சீரமைத்து அந்தியூரைத் தலைமையகமாகக் கொண்டு புதிய வட்டம் தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டது. புதிய அந்தியூர் வட்டம் உருவாக்கப்பட்டபோது, கோபிசெட்டிபாளைம் வட்டத்தில் இருந்த சந்திராபுரம் வருவாய் கிராமம், பவானி வட்டத்துடன் இணைக்கப்பட்டது.

2. ஈரோடு மாவட்ட ஆட்சியர், இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஈரோடு மாவட்டம், பவானி வட்டத்தில் உள்ள சந்திராபுரம் கிராமத்திற்கும் கோபிசெட்டிபாளையத்திற்கும் 8 கி.மீ. தூரம் எனவும், சந்திராபுரம் கிராமத்திற்கும் பவானிக்கும் 30 கி.மீ. தூரம் உள்ளதாகவும், ஏற்கனவே சந்திராபுரம் கிராமம், கோபிசெட்டிபாளையம் வட்டம், சிறுவலூர் உள்வட்டத்துடன் இணைக்கப்பட்டதாகவும், அரசாணையின்படி சந்திராபுரம் கிராமம் பவானி வட்டத்துடன் சேர்க்கப்பட்டு, தற்போது பவானி வட்டத்துடன் இணைந்து செயல்பட்டு வருகிறது எனவும், இந்நேர்வில், சந்திராபுரம் ஊர் பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து சந்திராபுரம் கிராமத்தை கோபிசெட்டிபாளையம் வட்டத்துடன் இணைக்கக் கேட்டு முறையீடுகள் வந்த வண்ணம் உள்ளதாகவும், மேலும், சந்திராபுரம் கிராமம், பவானி வட்டத்திலிருந்து 30 கி.மீ. தோலைவில் உள்ளதால் வருவாய்த் துறை சார்ந்தப் பணிகளை சந்திராபுரம் பொதுமக்கள் நிறைவேற்றிக் கொள்ள அசௌகரிய நிலை உள்ளதால் பொதுமக்கள் நலன் கருதி சந்திராபுரம் ஊராட்சி சார்பில் சந்திராபுரம் கிராமத்தை கோபி வட்டத்துடன் இணைக்க தீர்மான எண்.7, நாள் 5–12–2012–ன்படி, தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். மேலும், ஈரோடு மாவட்ட ஆட்சியர் பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், சந்திராபுரம் கிராம பொதுமக்களிடமிருந்து தொடர்ந்து முறையீடுகள் வந்த வண்ணம் உள்ளதாலும், பொதுமக்கள் நலன் கருதியும் சந்திராபுரம் கிராமத்தை மீண்டும் கோபிசெட்டிபாளையம் வட்டம், சிறுவலூர் உள்வட்டத்துடன் இணைப்பதால் ஊராட்சி ஒன்றிய எல்லை, சட்டமன்ற தொகுதி எல்லை மற்றும் பாராளுமன்ற தொகுதி எல்லை எதுவும் மாறுபடாது என்று தெரிவித்து சந்திராபுரம் கிராமத்தை மீண்டும் கோபிசெட்டிபாளையம் வட்டம், சிறுவலூர் உள்வட்டத்துடன் இணைக்கலாம் என தெரிவித்துள்ளார்.

3. முதன்மைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர், மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தற்போது பவானி வட்டத்தின் ஆட்சி எல்லையில் அமைந்துள்ள சந்திராபுரம் கிராமத்தை கோபிசெட்டிபாளையம் வட்டம், சிறுவலூர் உள்வட்டத்துடன இணைக்க பரிந்துரை செய்தும், பவானி வட்டத்தில் உள்ள சந்திராபுரம் கிராமத்தை பிரித்தலுக்கு பின் பவானி வட்டத்தில் 29 வருவாய் கிராமங்கள் இருந்தாலும், பவானி வட்டத்தில் அதிகப்படியான மக்கள்தொகை, பரப்பு மற்றும் முதல்நிலை நகராட்சிப் பகுதி அமைந்துள்ள காரணத்தினால், ஆட்சி எல்லை சீரமைக்கப்பட்ட பின், பொதுமக்கள் நலன் மற்றும் நிர்வாக நலன் கருதி பவானி தனி வட்ட ஆட்சி எல்லையாகக் கொண்டு சிறப்பாக செயல்பட ஏதுவாக இருக்கும் என ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரின் கோரிக்கையினை ஏற்று ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், சந்திராபுரம் கிராமத்தை கோபிசெட்டிபாளையம் வட்டத்துடன் இணைக்க பரிந்துரை செய்துள்ளார்.

4. மேற்காணும் சூழ்நிலையில் முதன்மைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையை ஏற்று ஈரோடு மாவட்டம் பவானி வட்டத்திலுள்ள சந்திராபுரம் வருவாய் கிராமத்தை மீண்டும் கோபிசெட்டிபாளையம் வட்டத்துடன் இணைத்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சந்தரமோகன், B.,**
*அரசு செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.